RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2223S11

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# The Present Day Social Environment in the novel "Bharatha Mathavukku jai" (Long Live Bharath Mata!)

## பாரத மாதாவுக்கு ஜே! நாவலில் இன்றைய சமூகச் சூழல்

**P. Ammudevi** [a,*]

[a] Department of Tamil, S.V. University, Tirupati-517502, Andhra Pradesh, India.

*Corresponding author Email: ammudevivenkat@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S11

Received: 13-04-2022; Revised: 05-07-2022; Accepted: 12-07-2022; Published: 19-08-2022

**Abstract:** The best Gandhian novel written in recent times is "Bharatha Mathavukku jai!". The author is PV Ramakrishnan, aka PVR. Away from the tendency of the novels of this era to deal only with some family structure, this novel analysis today's social conditions. In this novel, the corruption, violence, lies, and philandering happening in society have been openly depicted. Today, India is not ruled by anyone. Some are swayed. No obligation. No dignity. No control. The poor are also robbed by the poor. The rich also oppresses. Where are we going? We don't know. There is an uncontrollable situation where there is a party in the name of race, a party in the name of caste, a party in the name of religion, and the demonstrations of extremists. A hundred novels can be written about the current situation in our country. But in the foreword of the author, "Enna Puniyam" (But what's the point), he is angry at the current situation, and this novel is an expression of his fear that he can change it in any way through his writing. Education, medicine, and politics are the most important problems that people are facing today. Keeping in mind the imperatives of the times, this article explores the trend of injustices in these sectors and the manner in which narratives are taken to address them. It can be seen that the changes taking place in people's lives from time to time and the living conditions of people today have been depicted in this novel. Like the blood flowing in the body, the demon of bribery runs like a drain in the whole of our country, which is running like a sewer. Corruption, deception, and disruption by politicians could be seen everywhere. This novel makes us think about how to eradicate the corruption and bribery that have crept in like cancer. A situation has arisen in which the man who wishes to live in any way is forced to live somehow in today's era. Therefore, this novel teaches that one should not respect money but respect the mind and live with humanity. In the future, it is hoped that such books will help, like the squirrel that helped Rama to build the bridge, in the future to change the current trends of life and improve the morals of the people so that future generations can live happily in a corruption-free society.

**Keywords:** Bharatha Mathavukku jai, Ramakrishnan, Social Environment, Situation

**Language:** **Tamil**

## முன்னுரை

அண்மைக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த காந்திய நாவல் ‘பாரத மாதாவுக்கு ஜே!’ என்பதாகும் (Ramakrishnan, 2002). இக்கால நாவல்கள் சில குடும்ப அமைப்பை மட்டுமே எடுத்துச் சொல்லுகின்ற போக்கினின்று விலகி, இந்நாவல் இன்றைய சமூகச் சூழல்களை அலசுவதாக அமைந்திருக்கின்றது. இந்நாவலில் சமூகத்தில் நடக்கின்ற ஊழல், வன்முறை, பொய், பித்தலாட்டங்களை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

“பாரதம் என்கிற மாபெரும் ஆல விருட்சத்தில்

லஞ்சம் என்கிற விஷம் பாய்ந்து ஆயிரக் கணக்கான

விழுதுகளிலும் பரவலாயிற்று. பணம் என்னும் மிருகம்

விளையாடலாயிற்று”

இன்று பாரதம் யாராலும் ஆளப்படுவதில்லை. சிலரால் ஆட்டிவைக்கப்படுகிறது (Ramakrishnan, 2002). கடமை இல்லை. கண்ணியம் இல்லை. கட்டுப்பாடு இல்லை. ஏழையை ஏழையும் சூறையாடுகிறான். பணக்காரனும் வதைக்கிறான். நாம் எங்கே செல்கிறோம்? நமக்கே தெரியவில்லை. இனத்தின் பெயரில் கட்சி, சாதியின் பெயரில் கட்சி, மதத்தின் பெயரில் கட்சி, தீவிரவாதிகளின் ஆர்ப்பாட்டம், அதை அடக்க முடியாத திண்டாட்டம். நமது பாரதத்தில் இன்றைய நிலையைப் பற்றி நூறு நாவல்கள் எழுதலாம். ஆனால் என்ன புண்ணியம் என்ற ஆசிரியரின் முன்னுரைப் பகுதியினின்று, அவர் இன்றைய சூழலைக் கண்டு கொதிப்படைந்து, அதனைத் தன் எழுத்தின்மூலம் சிறிதேனும் மாற்ற முடியுமா? என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாக இந்நாவல் அமைந்திருக்கிறது (Ramakrishnan, 2010).

இன்று மக்கள் பெரிதும் சந்தித்து வரும் பிரச்சனைகளுள் மிகவும் முக்கியமானவை கல்வி, மருத்துவம், அரசியல் என்பனவாகும். இத்துறைகளில் அநீதிகள் நிலவும் போக்கையும், அவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கில் கதையை எடுத்துச் செல்லும் பாங்கையும் காலத்தின் கட்டாயத்தை மனதிற்கொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

## இன்றைய கல்விச் சூழல்

கியூபா நாட்டின் முன்னாள் அதிபர் ஃபிடெல் காஷ்ட்ரோவின் மறைவு ஈடுகட்ட முடியாத இழப்பு எனறு பலரால் கருதப்படுகிறது. அனைவருக்கும் கட்டாயக் கல்வி, இலவச மருத்துவ வசதி ஆகிய இரண்டிலும் கியூபா நிகழ்த்திய மகத்தான சாதனைகளுக்கு அவர் முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். மிக மோசமான பொருளாதார அரசியல் தடைகளுக்கு இடையேதான் இந்த சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஃபிடெல் காஸ்ட்ரோவின் படைத்தலைவரான சே குவேராவே இப்புரட்சிக்கு வழிகோலியவர் என்பது குறிப்பிடத்தக்கது (Anderson, 2010).

நாட்டில் இன்று கல்வி வியாபாரமாக்கப்பட்ட நிலை இந்நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. உலகின் பல நாடுகளில் அரசாங்கத்தின் மூலமாக மக்களுக்குக் கல்வி வழங்கப்படுகின்ற நிலையில்தான் நம் நாட்டின் தனியார் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் எனத் தொடங்கி மக்களிடம் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று கதைத் தலைவன் கீர்த்தியின் தந்தை அனந்தன் சொல்ல அதற்குக் கீர்த்தி கல்வித்துறையில் நடக்கின்ற ஊழல்களைப் பின்வருமாறு கூறுகிறான். ‘காலேஜ்னா ஆயிரம் பிரச்சனைகள் வரும். கல்வி இலாகா மந்திரியிலிருந்து கீழ்மட்டம் வரையில் வஞ்சம் கொடுக்க வேண்டி வரும். கொடுத்த லஞ்சத்தை மீட்க, நீங்க ஒவ்வொரு அட்மிஷனுக்கும் பெருந்தொகை வாங்க வேண்டியிருக்கும்’ (Ramakrishnan, 2002).

மற்றொரு இடத்தில் நம் நாட்டில் ஏன் இலவசமாகக் கல்வியை அளிப்பதில்லை என்பதற்கு,

‘எங்கே கல்வி வசதி கொடுத்தா ஏழையின் பிள்ளை

முன்னேறி கேள்வி கேட்பானோங்கற பயத்தில்

கல்வியே கொடுக்க மாட்டேங்கறாங்க’

எனும் கருத்தை முன்வைக்கிறார் ஆசிரியர் (Ramakrishnan, 2002).

கல்வியை இலவசமாக கொடுக்காததற்கான காரணத்தையும் கல்வித் துறையில் ஊழல்கள் நடக்கின்ற சூழலும் காட்டும் ஆசிரியர், கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் வழிகாட்டுகிறார். கதைத்தலைவன் கீர்த்தி ஒரு வீட்டை வாங்கி அதனைப் பள்ளிக் கூடமாக்குகிறான். அப்பள்ளிக்கூடம் வெறும் அ, ஆ, ஏ, பி, சி கற்றுக் கொடுக்க அல்ல. ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அந்த வழியில் அவர்கள் செல்ல அதைப் பயிற்சிக் கூட்டமாக்குகிறான் (Ramakrishnan, 2002). இதன் மூலம் தொழிற்கல்விக்கான திட்டத்தை மக்களுள் சிந்திக்க வைக்கிறார்.

## மருத்துவப் புரட்சி

தரமான கல்வி, சிறந்த மருத்துவம் இரண்டும் தம் குடிமக்களுக்கு வழங்க வேண்டியது அரசின் கடமை. அந்த அடிப்படையில் தமிழகத்தில் திட்டமிட்டு மருத்துவக் கல்லூரிகளும் மருத்துவமனைகளும் உருவாக்கப்பட வேண்டும். நம் மத்திய அரசும் அரசியல்வாதிகளும் அறிந்தே செய்த மிகப் பெரிய தவறு மருத்துவக் கல்வியைத் தனியார் மயமாக்கியதுதான். அந்த முடிவில் பெரும்பாலும் அரசியல் பெரும்புள்ளிகளின் சுயநலம் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டது. மக்கள் நலம் பின்தள்ளப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் பல இலட்சங்கள் முதல் கோடிகள் வரை பணம் செலுத்திப் படித்த மாணவரகள் அரசுப் பணிக்கு வருவார்களா? என்பது மிகப் பெரிய கேள்வி என்று விகடன் சர்வே முடிவுகள் கூறுகின்றன.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயின்று, இன்று பெரிய மருத்துவர்களாக இருப்பவர்கள், அசுரத்தனமான பொருளாதார வளர்ச்சியடைந்து இன்று கார்பரேட் மருத்துவமனைகளையும் தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மக்களைப் பணம் கொழிக்கும் யந்திரங்களாக மட்டுமே பார்க்கிறார்கள். மருத்துவமனைகள் மக்களுக்காகத்தான் என்பதை மறந்துவிட்டு வணிகத்தை முன்னிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் சட்டமன்ற உறுப்பினரும் மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளருமான தமிமுன் அன்சாரி. மேலும், 'கார்பரேட் மருத்துவமனைகளையும் தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நாவலில் அனந்தன் மருத்துவமனை அமைத்து பணம் நீட்ட எண்ணுகிறார். ஒரு முறை சாதாரண 'ஹிரண்யா' சிகிச்சைக்காக அவர் சென்றிருந்தபோது அதற்கு உண்டான செலவைக் கண்டு ஆச்சரியம் அடைகிறார். மருத்துவத்தை வியாபாரமாக மாற்றிய சூழலாலும் தன் மகன் சத்யா மருத்துவப் படிப்பை முடித்திருப்பதாலும் மருத்துவமனை அமைக்கும் எண்ணம் உருவாகிறது. இதற்கு மைத்துனர் சாமாவும் துணை நிற்கிறார். இதைப் பற்றி சாமா கூறுகையில்,

'வருஷம் முன்னூத்து அறுபத்தஞ்சு நாளும் ஓய்ச்சல் ஒழிவில்லாம இருக்கிறது. ரெண்டே இடந்தான் அனந்தா! ஒண்ணு வீட்டு சமையலறை இன்னொன்று ஆஸ்பத்திரி. தினசரி பசி வர்றமாதிரி தினசரி புதுப்புது நோயாளிகளும் பிறந்து கொண்டுதானிருக்கா. இப்ப இந்த ஆஸ்பத்திரி வியாபாரத்தை விட, பணத்தை அள்ளிக் கொட்டற வியாபாரம் எதுவும் கிடையாது, அனந்தா' என்கிறார். இதைக் கேட்ட அனந்தன் மருத்துவமனை வியாபாரம் ஆரம்பிப்பது என்ற முடிவில் உறுதியாகிறார்.

ஏழைகள் வைத்திய செலவுக்காக எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் உயிரோடு போராடுகின்ற வேதனைகளையும் அன்றாடம் நாம் காண்கின்ற காட்சியாகும். மருத்துவ மனைகளில் ஏழைகளின் உயிர்களோடு விளையாடுகின்ற நிலையை,

'சாதாரணமானதோர் கேஸைக்கூட தனியார் மருத்துவமனை டாக்டர்கள் பூதமாக்கி விடுவார்கள். அவசியம் இருக்கிறதோ இல்லையோ, புறங்கையில் ஒரு ஊசியை ஏத்தி சலைன் என்றும், குளுகோஸ் என்றும் ஏற்றிக் கொடுமைப்படுத்துவார்கள். தேவைக்கும் அதிகமாக நோயாளியை மருத்துவமனையிலேயே தங்க வைத்துக்கொண்டு, அவனுடைய நிதி நிலைக்கு ஏற்ப அவசியமில்லாத சோதனைகளையெல்லாம் நடத்துவார்கள்' என்று சாமாவின் மூலமாகத் தெரிவிக்கிறார் ஆசிரியர். சத்யா என்ற மருத்துவர், கோகுலா மருத்துவமனையில் பயிற்சி எடுக்கும்போது நடந்த நிகழ்வை ரமணா திரைப்படத்தின் மருத்துவக் காட்சியைப் போல் சித்திரிக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் சடலத்தை வைத்து சிகிச்சை அளிப்பது போன்ற காட்சி. இக்காட்சியைப் போன்ற ஓர் உணர்ச்சிகரமான காட்சி அதற்குப் பிறகு இன்றும் எந்தப் படத்திலும் வரவில்லை எனலாம். தனியார் மருத்துவமனையில் மக்கள் சந்தித்து வரும் பிரச்சனையை எடுத்துக்காட்டியதாலோ என்னவோ அதற்கு மக்கள் அனைவரும் ஏகோபித்த ஆதரவை அளித்தனர். இந்தக் காட்சி மக்களைப் பல கோணங்களில் சிந்திக்க வைத்தது. மருத்துவத் துறையில் நடக்கும் ஏகப்பட்ட ஊழல்களை இந்த ஒரு காட்சியின் மூலம் தோலுரித்துக் காட்டினார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்.

'மருத்துவத் தொழில் உன்னதமானதும் தெய்வீகமானதுமாகும். மனதால எப்பவும் ஆராதிக்க வேண்டிய தொழில்' (Ramakrishnan, 2002). நம்பிக்கையைப் பெறுவதே மருத்துவத் தொழிலின் தலையாய கடமையாகும். மருத்துவர் ஒருவர் நேர்மையாக ஒழுக்கக் கோட்பாடுகளைக் கடைபிடிப்பவராக

காணப்படுவதுடன் செயல்படுபவராக இரக்கம் உள்ளவராக பிறரின் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் மகிழ்ச்சி பெறுபவராக இருக்க வேண்டும். தன்னைத் தொடர்ந்து விருத்தி செய்து கொள்பவராகவும் மருத்துவ நலனில் பணிபுரிபவர்களோடு குழு உறுப்பினராய் இருந்து பணிபுரிபவராக இருக்க வேண்டும். ஒன்றை செய்ய இயலும் என்ற நிலையிலிருந்து அதை எவ்வளவு சிறப்பாக செய்ய இயலுமோ அவ்வளவு சிறப்பாக செயல்படுவதையே மருத்துவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிது. எனவே, மருத்துவர்கள் உன்னதத்தை நோக்கி பணியாற்ற வேண்டும். 'ஒரு மருத்துவ மனையை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு பயிற்சி பெறத் தேவையில்லை. எப்படி நடத்தக் கூடாது என்பதை மருத்துவர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்' எனும் கருத்துக்களை இந்நாவல் முன்வைக்கிறது.

மருத்துவத் துறையில் நடக்கின்ற ஊழல்களை நாவலின் பல இடங்களில் பல கோணங்களில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ஆசிரியர் அதற்கு தீர்வு காணும் நோக்கில் முன்னுதாரணமான ஒரு மருத்துவமனை ஒன்று அமைப்பதாக சித்திரிக்கிறார். இம்மருத்துவமனையில் ஏழை எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை [ஒரு ரூபாய் உண்டியலில் போட வேண்டும்] அளிக்கும் முடிவு செய்யப்படுகிறது. இது அனைத்து வசதிகளும் கொண்ட ஒன்பது அடுக்கு மாடிகள் கொண்ட பிரம்மாண்டமான கட்டிடமாக அமைக்கப்படுகிறது. இதில் பிரசவத்திற்கு சிகிச்சைக்கு, உடல் ஊனமுற்றோருக்கு பணக்கார மற்றும் ஏழை அனாதைகளுக்கு, பிள்ளைகளால் உதாசீனம் செய்ப்பட்ட பெற்றோருக்கு, நூலகத்திற்கு, குழந்தைகளும் இளைஞர்களும் விளையாடுவதற்கு, மனமுதிர்ச்சி இல்லாதோருக்கு என்று ஒவ்வொரு மாடியிலும் குறிப்பிட்ட மக்களுக்கென்று நிர்ணயிக்கப்படுகிறது. இம்மருத்துவமனை காந்தி பிறந்த நாள் அக்டோபர் 2ம் தேதி அன்று ஜனாதிபதி, பிரதமமந்திரி, முதலமைச்சருடன் ஏழை எளிய மக்கள் புடை சூழ ஆரவாரம் இன்றி எளிமையாகத் தொடங்கி வைக்கப்படுகிறது. இவ்வகையில் மருத்துவத்தில் புரட்சி கொண்டு வரவேண்டும் எனும் நோக்கமே நாவலின் முக்கிய அம்சமாக அமைந்திருக்கிறது

## இன்றை அரசியல் சூழலில் ஊழல்

நம் முன்னோர்கள் பணத்தை மிச்சப்படுத்த நேரத்தை செலவழித்தார்கள் இன்று நாம் நேரத்தை மிச்சப்படுத்த பணத்தை செலவழிக்கிறோம். எந்த வேலையும் துரிதமாக நடைபெற்றுவிடவேண்டும். இச்சூழிலில் தான் ஊழல் உருவானது. இவ்வூழல் எங்கும் எதிலும் பரவத் தொடங்கியது. இச்சூழல் நம் நாட்டில் ஊன்றி ஊறிப் போயிருக்கின்ற நிலையை நாவலின் கதாபாத்திரங்களின் உரையாடல் வாயிலாக வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

'கொடுக்க ஒருத்தன் இருந்தா, நீட்ட ஒன்பது கை இருக்கத்தான் இருக்கும். நீட்ட ஒரு கை இருந்தா கொடுக்க ஒன்பது கை நீளும். எல்லோருக்கும் காரியம் சட்டுபுட்டுன்னு ஆகணும். அதுக்கு பணம் தான் வழி' (Ramakrishnan, 2010) என்ற எதார்த்த வாதத்தைப் பதிவுசெய்கிறார் ஆசிரியர்.

எந்த காலத்திலும் நம் நாட்டில் லஞ்சமும் ஊழலும் இருந்து கொண்டுதான் வந்திருக்கிறது என்பதும் அந்தக் காலத்தில் லஞ்சம் கீழ்மட்டத்தில் யார் மனசையும் புண்படுத்தாத வகையில் கிம்பளம் என்கிற பெயரில் இருந்தது (Ramakrishnan, 2002). இப்ப நம்ப தேசத்தில் பொய், புனை சுருட்டு, பித்தலாட்டம், சூழ்ச்சி எல்லாம் தாண்டவமாடுகிறது. நம்ம கண் முன்னால நடக்கிறது. ஆனா தடுக்க முடியல. தடுக்க யாருக்குமே சக்தி இல்லாம போய்விட்டது எனும் உரையாடல்கள் மூலம் இன்றைய சமூகச் சூழல் வெளிப்படுத்தப்படுகிறது (Ramakrishnan, 2010).

அரசியல் பொதுநலத்துக்காக அல்ல, சுயநலத்துக்காகத்தான் என்ற எண்ணம் உதித்திருப்பதையும், பதவிகளில் தொடர்ந்து ஆதாயம் தேடுவதில் முனைப்பு அதிகரித்ததால் பொதுமக்களின் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் இந்நாவல் கூறும் செய்தியாகும். இந்நிலை மாறுவதற்கு குமாரகாந்தி என்ற காந்தியவாதியன் வழி தீர்வுக் காட்டுகிறார் ஆசிரியர்.

'நாடு பூரா மாநிலம் பூரா தேர்தல் வர்றப்ப ஒருத்தன் கூட வோட்டு போடாதபடி பார்த்துக்கணும். ஒரே ஒரு தடவை இப்படி நடந்தால் போதும். எல்லா அரசியல்வாதிகளும் பயப்படுவாங்க. இப்ப என்ன நடக்கிறது? மக்கள்ட்ட கையேந்தி பிச்சை வாங்கிட்டு அதிகாரம் கைக்கு வந்ததும் பிச்சை போட்டவனை எப்படி உதைக்கிறது. எதிர்த்துப் பேசறவனை, அவன் யாராக இருந்தாலும், அடியாள்களை அனுப்பி கைகால்களை முறிக்கிறது. சொன்னப்படி கேளாதவங்க அதிகாரவர்க்கத்துக்குத் தேவை இல்லை. [ப.66]

என்ற குமாரகாந்தியின் கூற்று இன்றைய அரசியல் வாதிகளின் நடத்தையையும் அவர்களுக்குப் பாடம் புகட்டும் வழியும் காட்டுகிறதை

நேர்மையாக வழிநடத்தும் அரசியல் வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மதிப்பில்லாமல் இருப்பதும் அதுவே அதிகாரத்தைப் பயன்படுத்தி துஷ்ப்ரயோகம் செய்கிறவர்களுக்கு கட்அவுட் வைப்பதும் அவர்களுக்குப் பயந்து காலில் விழுந்து மரியாதை செலுத்துவதுமாக இன்று நடக்கின்ற அரசியல் சூழலைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர் (Ramakrishnan, 2002).

குடிமக்கள் ஆட்சியானது இன்று குறிப்பிட்ட மக்களின் சூழ்ச்சியாக மாறி சாதாரண மக்கள் படும் அவலங்களை எடுத்துக்காட்டிய ஆசிரியர், 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற சங்க வாக்கிற்கேற்ப தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக அரிச்சந்திரன் [முதலமைச்சர்] எனும் பாத்திரத்தைப் படைத்துக்காட்டுகிறார்.

'அரிச்சந்திரனைப் போல நம்நாட்டில் எல்லா மந்திரிகளுமே எளிமையாக வாழ்ந்து, சரளமாகப் பேசி, தங்கள் வாகனங்களைத் தாங்களே ஓட்டி, தம்பாச்சாரிகளாக இல்லாமலிருந்தால் நாடே இருபத்தோராவது நூற்றாண்டில் சுபிட்சமாக இருக்கும் என்ற கீர்த்தியின் கூற்று ஸ்வீடன் போன்ற நாடுகளில் உள்ள மந்திரிகளைப் போன்று நம் நாட்டிலும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வெளிப்படுத்துகிறது (Ramakrishnan, 2002).

## இன்றைய மக்களின் நிலைமையும் இளைஞர் எழுச்சியும்

இன்று மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ளப் பயப்படுகிறார்கள் எதிர்த்துக் கேள்வி கேட்கவும் பயப்படுகிறார்கள். இருக்கிற இடம் தெரியாமல் வாழ்ந்து விட்டுப்போக வேண்டும் என்ற மனநிலையில் வாழ்கிறார்கள்.

இந்நிலை நாவலின் பல இடங்களில் காணப்பட்டாலும், 'ரொம்ப பேருக்கு இப்ப நாட்ல என்ன நடக்கிறதுன்னே தெரியாது. மாசா மாசம் ரேஷனில் அரிசி, சர்க்கரை, பாமாலின், கிடைச்சாப்போதும்னு பேசாம இருக்காங்க, ஏதேனும் ஒரு அத்தியவசியமான பொருளோட விலை திடீர்னு ஏறினா, 'இது நம்ம விதின்னு போயிடறாங்க' என்ற உரையாடல் மூலம் மிகச் சிறப்பாகத் தெளிவு செய்கிறார் (Ramakrishnan, 2002).

இச்சூழலை மாற்றுவதற்கு இளைஞர் சமுதாயம் எழுச்சி பெற வேண்டும் எதிர்த்துப் போராட வேண்டும் ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்க வேண்டும் என்று முனைப்பூட்டுகிறார் ஆசிரியர். இதற்குக் கீர்த்தி என்ற பாத்திரத்தைப் படைத்து இளைஞன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று காட்டுகிறார்.

'கீர்த்தி போன்று இளைய தலையமுறையில் நிறைய பேர் இருக்கணும். இவர்களெல்லாம் ஒண்ணு சேர்ந்து அமைதியாப் போராடனும். சமூகம் விழிச்சிக்க அலாரம் கடிகாரமாக முழங்கணும் என்று குரல் கொடுக்கிறார் ஆசிரியர். இளைஞர் என்ற ஆயுத்ததால் தான் நாட்டை அழிவுப் பாதையினின்று மீட்டெடுக்க முடியும் என்று எழுச்சியூட்டுகிறார். இளைஞர்கள் விழித்துக் கொண்டால் நாடு நலமும் வளமும் பெறும் என்ற நம்பிக்கையை விதைக்கிறார்.

## முடிவுரை

காலந்தோறும் மக்கள் வாழ்க்கையில் நிகழ்ந்து வருகின்ற மாற்றங்களையும், இன்றைய மக்களின் வாழ்க்கை நிலையையும் இந்நாவலில் படம்பிடித்துக் காட்டியிருப்பதைக் காண முடிகிறது. உடம்பில் இரத்தம் ஓடுகின்றது போல் நம் தேசம் முழுதும் இலஞ்சம் என்னும் பேய் சாக்கடையாக ஓடுகின்றது. எங்கு பார்த்தாலும் ஊழல், தில்லுமுல்லு, அரசியல்வாதிகளால் இடையூறுகள். புற்றுநோய் போன்று ஊடுருவி அழுந்தி உட்கார்ந்து விட்ட ஊழல்களையும் இலஞ்ச லாவண்ணியத்தையும் எப்படி அழிக்க வேண்டும் என்பதை இந்நாவல் சிந்திக்க வைக்கிறது. எப்படியெல்லாமோ வாழ வேண்டும் என ஆசைப்பட்ட மனிதன், இன்றைய கால கட்டத்தில் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்ற மனநிலைக்கு தள்ளப்பட்ட சூழல்நிலை உருவாகியுள்ளது. எனவே, பணத்தை மதிக்காமல் மனதை

மதித்து மனித நேயத்தோடு வாழ வேண்டும் என்பதனை இந்நாவல் போதிக்கின்றது. எதிர்காலத்தில் இப்போதிருக்கும் வாழ்க்கைப் போக்குகள் மாறவும் மானுட அறச்சிந்தனைகள் ஓங்கவும், வருங்கால சந்ததியினர் ஊழலற்ற சமுதாயத்தில் மகிழ்ச்சியுடன் வாழவும் இதுபோன்ற நூல்கள் இராமர் கட்டிய பாலத்திற்கு அணில் செய்த உதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

## References


Anderson, J.L., (2010) Che Guevara: A Revolutionary Life, Transworld Publishers Limited, United Kingdom.

Ramakrishnan, P.V., (2002) Bharatha Mathaku Je, Vaanathi Pathippagam, Chennai, India.

Ramakrishnan, P.V., (2010) Bharatha Mathaku Je, Thiruvarasu Book Publication, Chennai, India.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

P. Ammudevi, The Present-Day Social Environment in the novel "Bharatha Mathavukku jai" (Long Live Bharath Mata!), Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 1-6. DOI: https://doi.org/10.54392/ijmrd223S11